போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள்	திருவள்ளுவர் ஆண்டு 1980 கார்த்திகை 25	வீச்சு
3	10—12—49 சனிக்கிழமை	15

ஆசிரியர்கள்:



மத மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் போராடிய காரணத்தால் 300 ஆண்டு களுக்கு முன், ஐரோப்பாவில், உயி ருடன் தீயிலிட்டுப் பொசுக்கப்பட்ட புரட்சிவீரன்—சுயமரியாதைத் தீரன்

அஞ்சாநெஞ்சன் புரூனோ

அடிமைச் சாசனம் உருவாகி விட்டது

[துரைராசன்]

அடிமைச் சாசனம் உருவாகி விட்டது! இங்கல்ல—டெல்லிமா நகரில் உருவாகிவிட்டது! அரசியல் ஆக்க மன்றத்தின் திட்டங்களாக உருவாகிவிட்டது! எதிர்கால அரசியலமைப்பு என்ற அரவணைப்பினை, அணையாக, துணையாகக் கொண்டு உருவாகிவிட்டது! பண்டிதர் நேரு பூரிப்படைய, வீரர் வல்லபாய் விம்மிதமடைய, பூஜ்யர் பிரசாத் புளகாங்கிதமடைய, தேசிய ஏடுகள் கண்டறியாதன கண்டோம் என்று கிண்கிணி கீதம் இசைத்தபடி இருக்க, கருத்தில் தெளிவற்ற காமராஜர்கள் ஆஹா ஹா போட, இத்தகு கோலாகலங்களுக்கிடையே, கொட்டுமுழக்குடன் நிறைவேறிவிட்டது அரசியல் அடிமைச் சாசனம்! இந்த அடிமைச் சாசனத்தை அழகுபட அமைத்துத் தந்த அரசியல் ஆக்க மன்றத்தின் உறுப்பினர்கள் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் தானா, அல்லது ஆளும் அதிகாரவர்க்கத்தாலும் பிர்லாநேசர்களான பட்டேல் குழுவினராலும், இந்த இந்திய உபகண்டத்தின் பல்வேறு வட்டாரங்களிலிருந்தும் பொறுக்கி எடுக்கப்பட்ட கைதூக்கித் தலையாட்டும் இயந்திரங்களா என்ற ஐயவினா எழுத்தான் செய்யும், நாட்டின் எதிர்காலம் எழுச்சி பெற்று விளங்க வேண்டும் என்பதிலே அக்கரை கொண்ட அறிஞர் உலகிற்கு! இந்த வினாவிற்கு விடைபெறுங்கால், இந்த அவையின் உறுப்பினர்கள், ஊராள்வோரின் ஓலையின்படி மாளிகையில் அமர்ந்து மண்டலமாள்வோருக்கு எதிர்ப்புமொழி கூறாது, ஏற்புமொழிமட்டும் கொடுப்பதற்காகவே பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள் என்ற உண்மையை உரைத்துத்தான் தீரவேண்டும். ஊராள்வோரின் கூர்வாள் நம்மை நோக்கி வந்தாலும், அவர்களின் பொது அமைதி பராமரிப்புச் சட்டம் நம்மீது பாய்ந்து வந்தாலும் இந்த உண்மையை எடுத்துக்கூற நாம் அஞ்சமாட்டோம். வரலாற்றில் புகழ்பெற வேண்டிய அளவு முக்கியத்துவம் வாய்ந்த இத்தகு அரசியலமைப்பினை மக்களுக்காக மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் உறுப்பினர்கள் தயாரித்துத் தக்கபடி சட்டமாக்குவதுதான் மக்களாட்சிக் கோட்பாட்டிற்கும், மக்களை மதித்து மண்டலமாள்வோர் நடக்கிறார்கள் என்ற மாண்பிற்கும் மதிப்பளிப்பதாகும். ஊர் மக்களுக்குச் சீர்வாழ்வு கிட்டவேண்டும் என்ற உன்னதமான குறிக்கோளினை முன்வைத்துப் பார்க்கின்ற எவரும் இந்தக் கருத்தினைத்தான் ஒப்புக்கொள்வார்கள். அரசியலின் அரிச்சுவடி மட்டும் அறிந்தவர்கள் கூட இந்த முறையினையே வலியுறுத்திடுவர்.

அரசியல் அரிச்சுவடி மட்டும் அறிந்தவர்களே கூட இந்த மக்களாட்சிக் கோட்பாட்டினை நிச்சயம் வலியுறுத்துவரென்றால், அரசியல் பேரறிஞர்களாக, அற்புதமான மேதைகளாக, அவனி புகழும் அசகாய சூரர்களாக உலவும் பெரும் புகழுடையார் பண்டிதர் நேரு போன்றார் இந்த உன்னதமான ஊராட்சிக் கோட்பாட்டை—அரசியல் அமைப்பினை அவனி மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டு செய்வதுதான் நீதியின் பாலும் நேர்மையின் பாலும் சேரும் என்னும் சிறந்த இலட்சியத்தை—உண்மை ஜனநாயகப் பாதையை — சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மூன்று இலட்சியங்களையும் நிறைவேற்றற்குரிய நல்லதோர் மார்க்கத்தை, அறியார்களா? இல்லையேல், அறிந்துங்கூட, அந்த வழி சென்றால் தமது புகழேணியின் ஆணிவேர் துணிக்கப் பட்டுவிடும் என்ற அச்சத்தின் பிடியிலே சிக்கிச் சிதைகின்றனரா? இந்த இருவேறு வினைகளிலே முன்னதை விடப் பின்னதிலேயே நமது நாட்டம் செல்லுகிறது. இளமையிலேயே இங்கிலாந்து நாட்டிலே கலை பயின்றகாலை, சட்டக் கல்லூரியிலே பட்டம் பெற்றுத் திரும்பிய தீரர், அண்மையிலே கூட அமெரிக்க நாட்டிலே பவனிவந்த அவனி சுற்றும் அறிஞர் பண்டித நேருவுக்கு அரசியல் அறிவோ, திறமோ, திண்மையோ, வண்மையோ இருக்காது என்று நாம் கருதவில்லை. பின்னர் ஏன் நேரிய பாதையினை விடுத்துக் குறுக்குவழி சென்று குவலய மக்களுக்கு அவல வாழ்வினை நல்கும் முறையிலே அரசியல் திட்டம் தீட்டுகின்றார் நாட்டையாளும் நல்லவர், நானிலம் புகழும் பூமான், மனிதகுலத்து மாணிக்கம், மாவீரர் நேருஜி? ஆங்கில ஆட்சியிலே மாகாண சுய ஆட்சி ஒரு கேலிக் கூத்து என்று வேழமென முழக்கமிட்ட பண்டிதரும் அவரது கூட்டுத் தோழர்களும் இன்று நாட்டுக்குத் தீட்டும் அரசியல் திட்டங்களிலே அந்த சுய ஆட்சியினை அடியோடு போக்கிவிடும் முறையிலே செயலாற்றுவானேன்? இவர்களது முன்னாள் சொல்லையும் இந்நாள் செயலையும் ஒப்புநோக்குவோர், சொல்லும் செயலும் முரண்படும் நிலையினைக் காண்பார்கள் என்பதை ஏன் மன்பதை சுற்றிய இந்த மாவீரர்கள் மறந்து விட்டனர்? இந்நாட்டு ஏழை எளியோரின் வியர்வையிலே வடித்தெடுத்த வரிப் பணத்தைக் கொண்டு கோடிக் கணக்கிலே செலவழித்துத் தீட்டப்பட்டுள்ள இந்த அரசியல் திட்டங்கள் எதிர்கால மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுமா? அதற்கான அறிகுறிகூட இன்றைய இந்திய உபகண்டத்தின் நிலையினைக் கூர்ந்து நோக்குவோருக்கு — அரசியல் அறிவுக்கண் கொண்டு பார்ப்போருக்குத் தோன்றவில்லையே! இதனை நாம் நமது கற்பனையினையே அடிப்படை ஆதாரமாகக் கொண்டு கூறவில்லை, மாறாகப் புள்ளி விவரங்கள் என்ற இரும்புக் கோட்டையின் மீது நின்று கொண்டுதான் கூறுகின்றோம். இந்தியத் துணைக் கண்டத்திலே ஓரளவு முற்போக்குக் கட்சியாக மதிக்கப்படும் சோஷலிஸ்டு கட்சியின், தலைவர் நிலையில் உள்ள (பொதுச் செயலாளர்) தோழர்

(11-ம் பக்கம் பார்க்க)

உற்பத்தி பெருகவேண்டுமானல் உருவான திட்டம் தேவை!

கிராமங்கள் நகரங்களாக வேண்டும் விஞ்ஞான ஒளி அங்கு பரவவேண்டும்!

இடிமுழக்கம் போதாது! கூட்டுப்பண்ணை வேண்டும்!

“வானம் இடிந்தாலும் சரி, பூமி பிளந்தாலும் சரி, 1951-ம் வருடத்திற்குள் வெளிநாட்டு உணவு நம் நாட்டில் இரக்குமதி செய்யப்படுவது எப்படியும் நிறுத்தப்பட்டே யாகவேண்டும் அதற்கேற்றாற்போல் உணவு உற்பத்தியை நம் நாட்டில் அதிகப்படுத்தித் தீரவேண்டும்” என்ற கீதம் சென்னை உணவு அமைச்சர் கனம் ரோச்விக்டோரியா அவர்களிலிருந்து இந்தியப் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் வரை அவர்கள் பேசிடும் கூட்டங்கள் தோறும்—முழக்கமிடும் மாநாடுகள்தோறும்—அடிக்கடி நிகழ்த்தும் சட்டசபைச் சொற்பொழிவுகள்தோறும் முதலிடம் பெறுகிறது. நாம் முன்பே கூறினோம் “வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே மேல்” என்று! அதை உதாசீனம் செய்துவிட்டார்களென்றாலும் — இந்த சூனாமானாக்கள் கூறுவதா, நாம் கேட்பதா என்ற காரணத்தால் ஏற்க மறுத்துவிட்டார்களென்றாலும் இப்பொழுதாவது உணர்ந்து கைக்கொள்ள ஆரம்பித்துவிட்டனர் என்பதை அறிந்து அவர்களின் இந்த உணவு உற்பத்தி கீதத்தை, நாம் வரவேற்கிறோம் முழுமனதோடு வரவேற்கிறோம். அதுமட்டுமல்ல! உணவுப் பற்றாக்குறையைத் தீர்த்துக் கட்டும் செயலை அதிசீக்கிரமாகச் செய்கையளவிலே கொண்டு வருக எனவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரை, கட்சி வேற்றுமையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் முழுமனதுடன் ஆளவந்தார்களுடன் நாங்கள் ஒத்துழைக்கத் தயார் என்பதையும் தெரியப்படுத்துகிறோம். ஆனால், அதே சமயத்தில் இப்பிரச்சினை நாட்டிலே பேச்சளவிலே நின்றுவிடாமல் செய்கையளவிலே வர—மக்கள் மன்றத்தில் எக்களிப்புச் செய்து வரும் மாப்பசியைப் போக்குவதற்கு அரணாக வர — அம்மாப்பசியை ஒழித்துக் கட்டுவதற்குத் தேவையான ஆற்றலும் திறமையும், பழக்கமும் பண்பும், வசதியும் நிலைமையும் படைத்தவர்களாகிய உழவுத் தொழிலாளர்களின் நிலை உயர— சில அடிப்படைக் காரியங்கள் செம்மையாக — ஒழுங்காக — சிறந்த முறையில் கவனிக்கப்படுதல்வேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துக்கூற விரும்புகிறோம். அடிப்படை உறுதியாகச் செம்மைப்படுத்தப்பட்டிருந்தாற்றான் கட்டிடம் நல்ல நிலையிலே நிற்க முடியும். அதுபோலவே, 1951-க்குள் உணவுப்பொருள் இறக்குமதி அடியோடு நிறுத்தப்படவேண்டுமாயின், உழவுத்தொழிலின்— தொழிலாளிகளின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்குமுரிய சில செயல்முறைகள் உடனடியாக மேற்கொளப்படுதல் வேண்டும்.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டில் இங்கு பற்றாக்குறையாக இருக்கும் உணவு 45-லட்சம் டன் ஆகும். சென்ற நான்கு வருடங்களில் அதிகப்படியாக உற்பத்திசெய்யப்பட்ட உணவு 2½-லட்சம் டன். அது போக, இன்னமும் பற்றாக்குறையாக இருக்கும் உணவு மொத்தம் 42½-லட்சம் டன். இப் பற்றாக்குறையை நிவர்த்திக்க மத்திய அரசாங்கத்திலிருந்து இவ்வருடம்வரை ஒரு லட்சத்து இருபதினாயிரம் டன் உணவு கொடுக்கப்பட்டு வந்தது. 1950-வது வருடமுதல் அதுவும் பறிக்கப்பட்டு அதிகமாக 50% உற்பத்தியாக்க வேண்டுமாம். இதன்படி பார்த்தால் நமக்குப் பற்றாக்குறையா யுள்ள 42½ லட்சம் டன் உணவுபோக மேலும் 50% (மத்திய அரசாங்கத்தில் கொடுக்கப் பட்டதிலிருந்து) அதிகமாக விளைவிக்கச் செய்யவேண்டியதிருக்கிறது. 1951-க்குள் இம் மாகாணத்தின் இவ்வளவு பெரிய பற்றாக்குறையை நிவர்த்தித்தால்தான் வெளிநாட்டு இறக்குமதியைத்

[பாண்டியன்]

தடைசெய்ய வேண்டும் என்ற காகிதத்திட்டம் நடைமுறைத் திட்டமாக மாறமுடியும்.

இந்நாடு ஒரு விவசாயநாடு. இந்நாட்டு மக்களில், நூற்றுக்குத் தொண்ணூறுவிழுக்காடு பேர் கிராமவாசிகளே யாவர். இலட்சக்கணக்கான சிற்றறைகள் கொண்டிருக்கும் தேனடை போல, எண்ணற்ற கிராமங்களைத் தன்னகத்தே கொண்டிலங்குவது நம் நாடு. இதனால் கிராமங்களே நம்நாட்டின் உயிர் நாடி; கிராமங்களில் விளைவில்லையேல் நாடும் மக்களும் பட்டினியே என்பது நன்கு பெறப்படும்.

இது ஒரு விவசாய நாடாகவிருந்தும் இங்கு உணவுப் பற்றாக்குறை (பஞ்சம்) ஏற்படக் காரணம் என்னையோ எனின், இவண், மக்கட் பெருக்கம் மிகுந்திருக்கின்றதே ஒழிய அதற்குத் தகுந்தாற்போல் உணவு உற்பத்தி அதிகரிக்காததுதான். நல்ல விளைவினை அளிக்கக்கூடிய ஏராளமான நிலங்கள் இந் நாட்டில், விளை நிலங்களாக ஆக்கப்படாமல் புறம்போக்கு நிலங்களாக விடப்பட்டு வீணே பாழாகின்றன. உணவுப் பற்றாக்குறை இருப்பதற்கான மிக முக்கியமான காரணம் இதுதான். மேல்நாடுகளிலே விளையும் உணவுப் பொருளை என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்க வேண்டிய அளவுக்கும், மிச்சமாகிக் கிடக்கும் உணவுப் பொருளை இந்தியாவுக்கு அனுப்பலாமா, பாகிஸ்தானுக்கு அனுப்பலாமா, எந்த நாட்டிற்கு அனுப்பினால் நமக்கு நல்லது என்று யோசிக்கவேண்டிய அளவுக்கும் உணவுப்பொருள் ஏராளமாகக் குவிந்து கிடக்கிறது. உற்பத்தி அவ்வளவு அதிகம் அங்கே! அவ்வளவு அதிகமான அளவில் உற்பத்தி அங்கெல்லாம் திரண்டு உருவாவதற்குக் காரணங்கள் முக்கியமாக நான்கு. 1. உழவுத் தொழிலின் உயர்வுக்கு அடிப்படையான கூட்டுப்பண்ணை முறையில் விவசாயம் செய்தல். 2. உழவுத் தொழிலாளிகளுக்குப் படிப்பூட்டக் கிராமங்களில் எண்ணற்ற கல்விச்சாலைகள் ஏற்படுதல்—3. பட்டணத்திற்குள்ள ரேடியோ, சினிமா முதலிய நவீன வசதிகளை விட அதிகமான வசதிகளைக் கிராமங்களுக்கு அளித்து, விஞ்ஞான வெளிச்சத்தை இருண்டுகிடக்கும் கிராமங்கட்குத் தருதல் 4. ஏர், கலப்பை முதலிய பழங்கால ஆயுதங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, மெஷின் கலப்பைகள் முதலிய விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு உழுது பயிரிட்டு அதிக விளைவு பெறுதல்.

இந்த நான்கு முக்கிய காரணங்களால்தான் மேனாட்டு உழவர்களின் உண்பொருள் உற்பத்தி திகைக்கத்தக்க அளவு ஏராளமாக இருக்கிறது.

கிராமத்தின் சிறப்பே ஒரு நாட்டின் சிறப்பு — மக்களின் சிறப்பு — தொழிலின் சிறப்பு என்பதை அறிந்து மேனாடுகளில் கிராமங்கட்குத் தனிச் சலுகைகள் காட்டப்பட்டு வருகின்றன. இதனால் அங்குள்ள கிராம மக்களின் அறிவு தினம் தினம் வளர்கிறது. வளர்ந்த அறிவு பல ஆராய்ச்சிகளைச் செய்யத் தூண்டுகிறது. ஏன்? எப்படி? எதற்காக? என்ற வினாக்களை எழுப்பி ஒவ்வொரு பொருளைப்பற்றிய நுணுக்கத்தையும் கண்டறியத் தொடங்குகின்றனர். குதிரையை வைத்து உழுவதால் நல்ல பலன் கிடையாது என்பதை அறிந்து அறிவியல் வளர்ச்சியால் நூதன முறையில் இயந்திரங்கள் மூலம் விதைக்கவும், உழவும், அறுவடை செய்யவும் முற்படுகின்றனர்! அதுமட்டுமல்ல, வேண்டும்போது மழையைப் பெய்விக்கச் செய்வதும், வேண்டாத போது நிறுத்திவிடுவதுமான ஆராய்ச்சியில்கூட சிறப்பான வெற்றியும் பயனும் அடைந்து வருகின்றனர். விஞ்ஞான முறையால் நிரம்பப் பலன் தரத்தக்க உரமும் எருவும் சேகரித்துப் பயிரிட்டு நம் நாட்டில் ஒரு காணி நிலத்தில் விளையும் நெல்லைவிட மூன்று மடங்கு அதிகமான நெல்லை ஒரு காணி நிலத்திலேயே விளைவிக்கின்றனர். ஆனால் நாமோ இந்நாட்டில், இராமர் காலத்துக் கலப்பையையும், திருவள்ளுவர் காலத்து உழவு முறையையுமே இன்னமும் கையாண்டு வருகிறோம். இந்நிலையில் அங்கெல்லாம் உணவுப் பொருள் மலைபோல்குவிவதிலும், நம்மிடையே பற்றாக்குறை நிலைமையே இன்றும் இருப்பதிலும் என்ன வியப்பிருக்கிறது? இனியாவது, நம் உழவுத் தொழில் சிறப்படைய வேண்டுமானால், கூட்டுப்பண்ணை முறையும் இயந்திர முறை உழவும் உடனே நம் நாட்டில் ஏற்பட்டாக வேண்டும்.

நம் நாட்டில் விவசாயிகளுக்கு நிலம் சொற்பமாகவே யிருப்பதால் கூட்டுப் பண்ணை முறையில் விவசாயம் செய்வது மிக மிக அத்தியாவசியமானதாகும். நாம் பிற நாடுகளைப்போல, வேண்டும்போது மழையைப் பொழியச் செய்யக்கூடிய அளவுக்கு முன்னேறுவிட்டாலும் இந்தக் கூட்டுப் பண்ணை முறையைக் கைக்கொள்ளும் அளவுக்காவது முன்னேறித்தானாகவேண்டும். இதற்குத் தேவையான ஏற்பாடுகளை ஆட்சியாளர் கைக் கொண்டுதான் தீர வேண்டும் கூட்டுப் பண்ணையின் மூலம் எல்லாச் சிறிய நிலங்களும் ஒன்று சேர்வதால் குறைவான உழைப்பில்—

பணத்தில், அதிகப்படியான பலன் காண முடிகிறது ஆயிரம், பதினாயிரம், இருபதாயிரம் ஏக்கர் கூட்டாக உழும் நிலை ஏற்படுவதால், இயந்திரக் கலப்பை முதலிய நவீன கருவிகளைக் கையாள்வது, ஏரோப்ளேன் மூலம் விதை தூவுவது, இயந்திரங்களால் அறுவடை செய்வது, மனித உழைப்பைக் குறைத்து, நிலத்தின் விளைவை அதிகப் படுத்துவது முதலிய நல்விளைவுகள் ஏற்படுகின்றன. மொத்தமாக உழுது பயிரிடுவதால், உழவுக்குத் தேவையான விதைகள், கருவிகள், முதலியவற்றை மொத்தமாக வாங்க முடியும். அப்படி வாங்குவதால், சில்லறையாக வாங்கும் போதிருப்பதைவிட மிகக் குறைவான விலைக்கு அவற்றை வாங்க முடிகிறது. விளைந்து வரும் பொருளையும் மொத்தமாக விற்று அதிகமான லாபம் பெற முடிகிறது. எல்லோரும் சேர்ந்து ஒரு சமப்பட்டு வேலை செய்ய வேண்டியிருப்பதால் பணக்காரன், ஏழை என்ற ஏற்றத்தாழ்வும் அற்றுவிடுகிறது. பதுக்கல்—கொள்ளையடித்தல்— பிளாக் மார்க்கட்டில் விற்றல் ஆகியவற்றிற்கும் இடமில்லாமல் போகிறது. விளைவும் இப்போதிருப்பதைவிட ஒன்றுக்கு இரண்டாக ஆகிறது. இவ்வளவு நன்மைகளையும் தருவதாக இருப்பதால், சர்க்கார், உடனடியாக இக் கூட்டுப்பண்ணை முறையை நடைமுறைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

அடுத்தபடியாக அரசாங்கத்தார் கவனிக்க வேண்டிய பொருள் கல்வித்துறை. இன்னும் கிராமக் கல்வி நம் நாட்டில் மிக மோசமான நிலைமையிலேயே இருக்கிறது. "படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்" என்ற ஏளனப் பேச்சு இன்னும் கிராமத்தை விட்டு நீங்கினபாடில்லை. மேல் நாட்டினர், முக்கியமாக முன்னேறியிருப்பதற்குக் காரணம் அங்கு, நூற்றிற்குத் தொண்ணூறு விழுக்காடு முதல், நூற்றிற்குத் தொண்ணூற்று ஒன்பது விழுக்காடு வரை, மக்கள், படித்தவர்களாக இருப்பதுதான். அப்படி இருப்பதால்தான் அவர்கள், பல நாட்டு விஷயங்களை அறியவும், உலக நிலைமையை உணரவும், விஞ்ஞான வளர்ச்சியை உழுதொழிலுக்குப் பயன் படுத்தவும் முனைந்து, உணவு உற்பத்தியை அதிகப் படுத்துவதோடு நில்லாது, தங்கள் வாழ்க்கை நிலையையும் மனப்பக்குவத்தையும், அறிவு வளத்தையும் கூட உயர்த்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நம் கிராமாந்திர மக்களோ கிணற்றுத் தவளைகளே போல் இருக்கின்றனர். அமெரிக்காவில் எம்முறையில் பயிரிடுகிறார்கள், ஆஸ்டிரேலியாவில் உழவு எப்படி நடைபெறுகிறது, ருமேனியா, ஹங்கேரி, டென்மார்க் ஆகிய நாடுகளில் விவசாயிகள் வாழ்வு எப்படி இருக்கிறது என்பன போன்ற செய்திகளை அறிந்து கொள்ள வேண்டிய இவர்கள், நித்தநித்தம் பஞ்சாங்கத்தைப் புரட்டிக்கொண்டு, ஆவணியிலே அம்மன் குடை விசேஷம் என்றும், புரட்டாசித் திங்களிலே திருச்செந்தூர் முருகக் கடவுளுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்றும், தில்லையிலே இடது பாதம் தூக்கித் திரு நடனம் புரியும் தில்லையப்பனை எப்பொழுது தரிசிப்பது என்றும் வீணுரைபேசி வெறும்பொழுது போக்கிக் கொண்டிருக்கின்றனர்—பழைய சம்பிரதாய மூடப் பழக்க வழக்கங்களில் மூழ்கிக் கிடக்கின்றனர். ஆட்சியாளர்கள், அறிவுத்துறை வளர்ச்சியில் ஈடுபட்டு, மூட நம்பிக்கை என்னும் பேயை ஓட்டி, வைதீக வம்புகளை வீழ்த்தி, விஞ்ஞானப் பாதையில் கிராமவாசிகளை அழைத்துச் செல்லல் வேண்டும்; கிராமத்திற்கோர் கல்விச்சாலை நிறுவப்படல் வேண்டும். முதியோர் கல்வித்திட்டம் ஏட்டளவிலேயே — பேச்சளவிலேயே இருக்கவிடப்படாமல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட வேண்டும்,

கிராமவாசிகளே நாட்டின்—நாட்டு மக்களின் உயிர்நாடி என்பதை அறியாமல் சிலர் "பட்டிக்காட்டான்" என்ற வெறுப்புணர்ச்சியை ஊட்டுகின்றனர். இந்நிலை மாறி, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று எல்லோரும் சரிசம நிகராகக் கருதப்படுகின்ற நிலை வருதல் வேண்டும். உழவுத் தொழில் உழைப்பாளிக்கு நல்ல ஊண்—உடை—உறைவிடம் ஆகியவை, தகுந்த முறையில் கொடுக்கப்படவேண்டும் அல்லும், பகலும் ஓயாது உழைத்து — உருமாறிக் கிடக்கும் உழவன் வாழ்வைக் கெடவிடாமல் உழைப்போனுக்கு உயர்வும் வாழ்வும் அளித்தல் வேண்டும். அறிவியல் வளர்ச்சிக்கான ரேடியோ நிலையங்களும், சொற்பொழிவு மன்றங்களும், சினிமாப் படங்கள் மூலம் புகட்டும் (Visual Education) புதுமுறை வசதிகளும் சிறந்த வாசகசாலைகள், நூல் நிலையங்களும் ஏற்படுத்தல் வேண்டும்.

நமது சர்க்கார், இறக்குமதியைத் தடைசெய்யவேண்டும் என்று பேசும் இதே சமயத்தில் மேலே குறிப்பிட்ட அபிவிருத்திக்கான நல்ல முறைகளைக் கைக்கொள்வதுடன், நம் நாட்டிலும் மேலை நாட்டைப்போல குறைந்த உழைப்பில் அதிக பலன் தரும் விஞ்ஞான முறையில் விவசாயம் செய்யவும்

(10-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 கார்த்திகை 25
10—12—49 சனிக்கிழமை

ஜவஹர் இப்படி! ராஜாஜி அப்படி!
தேசிய சிங்கங்காள், நீங்கள் எப்படி?

1

“உற்பத்தி! உற்பத்தி! உற்பத்தி!—இதுதான் ஒவ்வொரு இந்தியரின் மூல மந்திரமாக இருக்க வேண்டும். உணவு, உடை, இரும்பு, நிலக்கரி, எஃகு, சுரங்கப் பொருள்கள், —இந்த ஒவ்வொரு துறையிலேயும் உற்பத்தி பெருகவேண்டும். இந்தப் பொருள்களின் கூட்டு மொத்த உற்பத்திதான் இந்தியாவின் செல்வம். இவற்றின் உற்பத்தியை எவ்வளவுக் கெவ்வளவு முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக்குவதுதான் இந்தியரின் முதற் கடமை.”

2

“இரும்பு, எஃகு, நிலக்கரி—இவைகள் அல்ல இந்தியாவின் செல்வங்கள்! மதம்! ஆம், அதுதான் இந்தியாவின் உண்மைச் செல்வம். எனவே மதத்தை வளர்ப்பதுதான் இந்தியரின் முதற்கடமை. உலகம் முழுவதிலும் மதம் ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டாலும் சரி, இந்தியர்களாகிய நீங்கள் மதத்தை வளர்த்துத்தான் ஆகவேண்டும்.”

* * *

இரண்டே இரண்டு கருத்துக்கள்தான் மேலே தரப்பட்டிருக்கின்றன! ஆனால் இந்த இரண்டுக்குமிடையே எவ்வளவு மகத்தான வேறுபாடு இருக்கிறது! ஒன்று வடதுருவமானால், மற்றொன்று தென் துருவம்! ஒன்று, சீறிப்பாயும் சிறுத்தை என்றால், மற்றொன்று குழைந்து நிற்கும் அழகு பசு! ஒன்று தணலெனத் தகிக்கும் கதிரவன் என்றால் மற்றது குளிர்ச்சியைக் கொட்டிடும் கோலமார் நிலவு! ஒன்று, உயிரைக் குடித்திடும் உலுத்தத்தனம் மிகு கருநாகமெனில் மற்றது கொஞ்சிப் பேசிடும் செஞ்சொல் திறமிகு பஞ்சவர்ணக்கிளி! ஆம்! இரண்டு கருத்துக்களுக்குமிடையே மிக ஆழமான, மிகமிக அகலமான, இடைவெளி இருக்கிறது என்பது மட்டுமல்ல, இவை, ஒன்றிற்கு ஒன்று நேர்முரணான கருத்துக்களுமாகும். பால்—விஷம்—இவை இரண்டிற்குமிடையே இருக்கும் முரண்பாட்டைவிட, சமதர்மம்—முதலாளித்வம்—இந்த இரு இலட்சியங்களுக்குமிடையே காணப்படும் எதிர் எதிர் தன்மையைவிட, ஆரியமுறை—தமிழர் நெறி—இந்த இரு வாழ்க்கைப் பாதைகளுக்கிடையே அமைந்து கிடக்கின்ற மாறுபாட்டைவிட, நாம் மேலே பொறித்துள்ள இரு கருத்துக்களுக்கிடையே காணப்படும் மாறுபாடு, முரண்பாடு, எதிர் எதிர் தன்மை, ஆயிரம் மடங்கு அதிகப்படியாவது.

இவ்வளவு முரண்பாடான கருத்துக்களை மொழிந்தவர்கள் முறையே யார் யார்? ஒருவர் காங்கிரஸ்காரரும் மற்றவர் கம்யூனிஸ்டுமா? இல்லை! ஒருவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தழுவிநிற்கும் தகைமையும், மற்றவர், பிராம்மண மகாசபையில் முக்யஸ்தராக இருக்கும் மனப்போக்கும் படைத்தவரா — கிடையாது! ஒருவர் சோஷலிஸ்ட் கட்சி சூத்திரதாரியும் மற்றவர் ஆர். எஸ். எஸ். கூடாரத்துக் கோமானுமா — அல்ல அல்ல! இந்த இருவித கருத்துக்களைத் தந்துள்ளவர்களும் ஒரே கட்சியினர்தான்! ஒரே அரசியல் முகாமில் பன்னெடுங்காலமாகப் பவனி வரும் பழக்கமும் பண்பும் படைத்தவர்கள்தான்! இருவருமே பாரதபுத்திரர்கள்! அதுமட்டுமல்ல, இருவருமே மறைந்த மாபெருந் தலைவர் காந்தியடிகளாரின் கருணைக்கு உரியாராய், அன்புக்கு ஏற்றாராய், அவர்தம் உள்ளம் கவர்ந்த உயர்வு படைத்தவர்களாய் இருந்தவர்கள்தான்!

இரு துருவங்கள் எனத் தகும் முரண்படு கருத்துக்களை அளித்த இரு தலைவர்களும் ஒரே கட்சியில், ஒரே தலைவரின் அன்பினால் வளர்க்கப்பட்ட ஒரே வகைப் பெருமையுடன் இருப்பவர்கள் என்பதுமட்டுமல்ல உண்மை! இருவரும் இந்திய சர்க்காரில் ஒருசேரக் கொலுவீற்றிருக்கும் ஆற்றலும் நிலைமையும் கைவரப் பெற்றவர்கள்! ஒருவர், கவர்னர் ஜெனரல்—மற்றவர், பிரதம அமைச்சர்! ஒருவர் ராஜாஜி! மற்றவர் பண்டிட்ஜி!! பெயரிலேகூட ஒற்றுமை — இருவரும் இரு “ஜீ”க்கள்!

இவ்வளவு ஒற்றுமையுடன் இருக்கும் இம் மாபெருந் தலைவர்கள்தான் அவ்வளவு மாறுபாடான கருத்துக்களை அணித்

ரமாக மொழிந்திருக்கிறார்கள்.
ஒருவர் இவ்வண்ணம் பேசினார்
ன்பதை அறியாமல்தான் மற்
வர் அதற்கு மாறுபடும் வண்
ணம் உரை பல மொழிந்துவிட்
ருப்பார் — இல்லாவிட்டால்
இப்படி முரண்பாடாகப் பேசு
வார்களா" என்று தேச பக்தர்
ாரேனும் கூறி, திகைத்து நிற்
கும் தம் உள்ளங்களுக்குச் சமா
தானச்சாயம் பூசிடவும் முடி
ாது— ஏனெனில் ஒருவர்
பேசியதை நன்றாக அறிந்த பிற
குதான் மற்றவர் அதற்கு மாறு
படப் பேசியிருக்கிறார்!
ஓஹோ அப்படியா சேதி!
அப்படியானால், ஒருவர் பேசி
வெகு நாட்களாகிவிட்டிருக் ம்
—மற்றவர் அந்தப்படி அவர்
பேசிய சம்பவத்தையே அடி
யோடு மறந்து விட்டிருப்பார்
—மறந்து விட்ட காரணத்தால்
அதற்கு நேர் மாறாகப் பேசியி
ருப்பார்—இல்லா விட்டால்
பேசுவாரா?" என்று மறுபடியும்
ம்மை சமாளித்துக் கொண்டு
தியதோர் வாதம் புரியலாம்
ாரததேவியின் அருமந்த சீடர்
ள். ஆனால் பாபம், அந்த வா
த்தைக் கூறியும் அவர்கள்
ப்பித்துக் கொள்ள முடியாது.
ரு கருத்து வெளியிடப்
ட்டு இரண்டே இரண்டு நாட்
ள் முடிவதற்குள்ளாகவே மற்ற
ருத்து வெளியிடப் பட்டிருக்கி
து! இரண்டு கருத்துக்களுக்கு
டையே இருக்கும் காலவித்யா
ம் ஆண்டுக் கணக்கில் இல்லை—
ாதக்கணக் கிலுமில்லை—நாட்
ணக்கில்தான் இருக்கிறது—
ணிக்கணக்கில் ன்று கூடக்
றலாம்—48 நேரம்தான்
த்யாசம் ஜீக்கும் ராஜ
க்கும்! ஆ னால் அந்த
8 மணி ற்குள்ளாக,
இருவருக்குமி எவ்வளவு
பரிய வித்யா இருக்கிறது
ன்பது புலப்பட விட்டது!
ண்டிதர் நேரு பரபரப்புடன்

கூறுகின்றார் இரும்பும் எஃகும்
உணவும் பருத்தியும் உடனே
பெருக வேண்டும்—அவைதான்
உண்மைச் செல்வம் என்று!
சொல்லி இரண்டு நாட்கள் முடி
வதற்குள் அன்பர் ஆச்சாரியார்
அவசரமாகக் கூறுகிறார் இரும்
பும் எஃகுமல்ல உண்மைச்செல்
வம், மதம்—ஆம்—அதுதான்
நம் உண்மைச் செல்வமென்று!

யார் கூறுவது சரி, யார்பேசு
வது தவறு—அதைப்பற்றி
அல்ல நாம் இங்கே யோசிக்கச்
சொல்லுவது—அதுவேறு பிரச்
சினை—ஆனால் இங்கே நாம் கவ
னிக்க வேண்டியது ஒரே கட்சி
யினரால் நடத்தப்படும் ஒரு
சர்க்காரில் அந்தக் கட்சியைச்
சேர்ந்த பிரதம மந்திரி கூறிய
கூற்றினை அதேகட்சியைச்சேர்ந்
தகவர்னர் ஜெனரல் நேர்முக
மாக—அதவும் இரண்டே நாட்
களில்-எதிர்த்துப் பேசுகிறாரே,
இது எவ்வளவு பெரிய வெட்கக்
கேடு என்பதைத் தான்!

கவர்னர் ஜெனரல் வடதுரு
வம்! பிரதம மந்திரி தென்துரு
வம்!! இப்படி ஒரு சர்க்கார்
இருக்குமானால் எப்படி நம்
நாடு உருப்படுவது—அதைத்
தான் சிறிது சிந்திக்கச் சொல்லு
கிறோம் உங்களை—யார் பேச்சு
சரி என்பதை அல்ல!

அன்பர் ஆச்சாரியார் இவ்
வளவு அவசர அவசரமாகப்
பண்டிதர் நேருவின் பரவகப்
பேச்சை வெட்டிப் பேசுவதற்கு
என்ன காரணம்—இருவருக்கு
மிடையே பிடித்தமில்லையா, உற
வுகெட்டு விட்டதா, 'தலாக்'
நடந்து விட்டதா, அன்பு
இணைப்பு முறிந்து விட்டதா,
பண்டிதர் பேச்சை வெட்டிப்
பேசினால்தான் தன் வல்லமை
தெரியும் நாட்டுக்குஎன்ற நினைப்
பா—எது காரணம் கவர்னர்
ஜெனரல் என்ற இமயமலைச் சிக
ரத்தில் வீற்றிருக்கும் ஆரியகுல

தலைவரின் இந்த அதிர் வேட்டுப்
போக்குக்கு? எது காரணம்?

உற்பத்தியைப் பெருக்குவது
தான் முக்கியம் என்கிறார் பண்
டிட்ஜீ! அல்ல!— மதத்தை
வளர்ப்பது தான் அதி அவசி
யம் என்கிறார் ஆச்சாரியார்ஜீ!
தென்னாட்டுத் தேசிய வாதி
காள், உங்களுக் கிருக்கும் ஜீக்
கள் இரண்டு! அதிலே ஒரு 'ஜீ,
இப் படி இருக்கிறது! மற்ற 'ஜீ'
யோ அப்படி இருக்கிறது!
ஆனால் நீங்கள் எப்படி? இந்த
'ஜீ' பக்கமா, அந்த 'ஜீ' பக்க
மா? எந்த ஜீ, உங்கள் ஜீ?—ரா
ஜாஜீயா, ஜவஹர்ஜீயா? பிரதமர்
ஜீயா—கவர்னர் ஜெனரல்ஜீயா?
எந்த ஜீ, தேசியஜீ, உங்கள் ஜீ,
எங்கட்குச் சொல்ல மாட்டீர்
களா ஜீ?

(11ம்-பக்கத்தொடர்ச்சி)
கயிறுகொண்டு வடநாடு என்னும்
சுரண்டல் இயந்திரத்தில் சேர்க்கப்
பட்டுவிட்ட திருநாடே! உனக்கு
மீட்சி கிடையாதா? விடுதலை
உனக்கு இல்லையா? சுதந்திரத்
தின் நறுஞ்சுவையை நீ நுகரும்
நாள் விரைவில் வாராதா?

திராவிடமே, உன்னை நினைத்
தாலே கண்கள் கலங்குகின்றன.
கதைகளில் எல்லாம் கோரமானது
உன் கதை. நந்தவனத்தை ஆள
வந்தவன் நந்தவனத்துப் பூக்களை
யெல்லாம் பறித்துவிட்ட கதை
போல, உன் எழிலை, இன்பத்தை,
செல்வத்தை, சிறப்பை, சீர்மிகு
நிலைமைகளைச் சூறையாடுகின்
றதே வடநாட்டுச் சுரண்டல் இயந்
திரம்—இந்தச் சூது மிகுந்த சூழ்ச்
சிப்பொறியிலிருந்து நீ தப்புவதற்கு
மார்க்கம் கிடையாதா? கிடை
யாதா இதற்கொரு மார்க்கம்?

அடிமைச்சாசனம் உருவாகிவிட்
டது! ஆமாம்! ஆனால் சுதந்தர சூரி
யன் உதிப்பது எந்நாளோ?

சென்ற இதழ் அட்டையில்!

சென்ற இதழ் அட்டையில்
வெளிவந்திருப்பதும் காந்தியடிகள்
படம்தான். அவர் மாணவராக
இருந்தபோது எடுத்தது.

வானவில், வானவில்தானே!

"குமார்"

பூரண சந்திரிகை பொலிவுடன் பொட்டற் காட்டில் காய்கின்றது. என்ன பயன்? அதைப் போன்றது தான் அவள் வாழ்வும். அவள் எழில் மிகு உருவுடையாள். கூர்வேல் போல் கண்ணுடையாள். அன்றலர்ந்த கொடி போன்ற நுண்ணிடையாள். காற்றிலே மிதந்து வரும் கீதம் போன்ற நடையுடையாள். எல்லாம் இருந்தும் என்ன பயன்?

அவளும் வாழத் தான் பிறந்தாள். வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறாள். ஆனால், அதன் பெயர், வாழ்வா, முழுவாழ்வா? இல்லை! ஆயுள் கைதி, சிறையில் வாழவில்லையா? அது போன்றது தான் அவள் வாழ்க்கை! மரணத்தின் சாயல் படிந்த பாதி வாழ்க்கை!

கமலா பக்குவ மங்கை. மணமான மறுதினமே பிணமான கணவன் அவளுடைய எதிர்காலம் என்னும்ஓவியத்தின் மீது விதவை என்ற இரும்புத் திரையை மூடி விட்டுச் சென்று விட்டான். வைதீகசிறைக்கோட்டத்தில் வாட்ட முற்று இருக்கும் தாயற்ற அவளைப் பணம் கொண்டு தேற்றப் பார்த்தார் அவளின்தந்தை. மகளின்மனப் பிணிக்கு மறுமணம் தான் மருந்து என்பதை அவர் அறிவாரா? அறிந்தாலும் அதைத் துணிச்சலுடன் செய்யத்தான் முற்படுவாரா? பரம்பரைப் பழக்கம் என்னும் பாழும் வைதீகம், தன் சாஸ்திரம் என்னும் கோரப் பற்களைக் காட்டிப் பயமுறுத்தும் போது அவரால் எதைத்தான் சாதிக்க முடியும்?

கமலா ஒரு கூண்டுக் கிளி. சேற்றிலே செழித்த செந்தாமரை. ஆம்! அப்படித் தான் இருந்தாள் அவள்! இருந்தாலென்ன? கூண்டுக் கிளி எப்போதுமேவா கூண்டுக் கிளியாக இருந்து விடுகிறது? சேற்றிலே மலர்ந்த செந்தாமரைப் பூ சேற்றிலே இருக்கிற காரணத்தால் பறிக்கப் படாமலேயா இருந்து விடுகிறது? கூண்டுக் கிளிக்கும் சிற்சில சமயம் விடுதலை கிடைப்பதுண்டு. சேற்றிலே பிறந்த செந்தாமரைக்கோ எப்போதும் கிராக்கி உண்டு.

கிளியைக் கூண்டிலிருந்து வெளியேற்றி வாழ்க்கை வானிலே சுதந்தரமாய்ப் பறக்கும்படி செய்திட என்னால் முடியும் என்று சொல்லிக் கொண்டு வரவில்லை குமார். ஆனால், அவன் அந்தச் செயல் புரியத்தான் செய்தான்.

விதவைக்கூண்டிலிருந்தகமலாவை குமார்காதல் எனும் வெட்டவெளிக்கு அழைத்து வந்தான். வறண்ட அவள் வாழ்க்கையில் இளமை நீர் பாய்ச்சி காதல் வித்தூன்றினன். குமார், கமலாவின் எதிர் வீட்டில் உள்ள தெருப்பக்கத்து அறையில் வசித்து வந்த கல்லூரி மாணவன். காண்பவரைக் கவரும் கட்டழகன். கமலா—குமார் இருவர் கண்களும் அடிக்கடி சந்தித்து அகநானூற்றுக்குப் புதுப்பொருள் கண்டு கொண்டிருந்தன.

அவர்கள் இருவரும் தம்தம் கண்கள் எனும் எழுதுகோலினை, பார்வை எனும் மையில் தோய்த்தெடுத்து, வாழ்க்கை எனும் ஏட்டில், காதல் எனும் கவிதையை அழகும் சுவையும் ததும்பும் விதத்தில் தீட்டிக் கொண்டிருந்தனர். காதல் இலக்கியம் அவர்களுடைய கண்கள்எனும் எழுதுகோலால் தினம் தினம் வளர்ந்[illegible] கொண்டிருந்தது.

ஒரு நாள் கமலாவின் தந்[illegible] வேற்றூர் சென்றிருந்தார். கா[illegible] கையின் வீடுநோக்கிச்சென்று[illegible] குமார். நாற்காலியில் அமர்ந்[illegible] நாவல் ஒன்றினை வாசித்து[illegible] கொண்டிருந்த கமலா, அவனை[illegible] கண்டதும் திடுக்கிட்டாள். [illegible] சும் வழியறியாது விழி வழி[illegible] அவளை விழுங்கிக் கொண்டிரு[illegible] தான் அவன்! மௌன மொழி[illegible] பேசினர் நீண்ட நேரம். பிற[illegible] தமிழ் மொழி பேசலாயினர்[illegible] அவன் தான் பேசஆரம்பித்தா[illegible] முதலில்:

அன்பே மன்னிப்பாய[illegible] என்னை! மண்டிக் கிடக்கும் ம[illegible] உணர்ச்சிகளை மடை வெள்ள[illegible] போல் திறந்து கொட்டுகிறேன்[illegible] இன்பக் கனவுகளை ஈடேற[illegible] செய்வாயா?"

"கட்டளையிடுங்கள் அததா[illegible] காரிகை காத்துக் கொண்டிரு[illegible] கிறாள் நிறைவேற்ற! கருத்தை[illegible] கவர்ந்த கட்டழகரின் கட்டளை[illegible] யை மறுப்பவரு முண்டோ[illegible] மாநிலத்தில்?

"கோபமா உனக்கு கமல[illegible] நான் இங்கே வந்தது பற்றி"

"கோபமா—எதற்கு[illegible] தெள்ளு சுவை மிகு கருப்ப[illegible] சாற்றினை நான் அள்ளிப் பரு[illegible] வதற்கு நீர் அளிப்பது கண்டா[illegible] எப்படி அத்தான் கோபம்வரு[illegible] இதற்கு?"

"என்மீது [illegible] அன்பு தா[illegible] உனக்கு?"

"ஏன் சந்[illegible] உமக்கு?"

புன்னகை[illegible] ாள் பூங்[illegible] டியாள். இ[illegible] கீதம் இசை[illegible] தான் இன்[illegible] ழியான். வீ[illegible] நாதத்தை [illegible] ழைத்தது. நாத[illegible] வீணை அரு[illegible] சென்றது. வீ[illegible]

ம் நாதமும் இணைந்தால் இசை
ம் இனிமையும் எழும் என்ப
தச்சொல்லவா வேண்டும்?
தல் கீதம் அந்த அறை முழு
தும் துள்ளி விளையாடிக்கொண்
ருந்தது.

பிறகு.........? பிறகென்ன?
மயம் நேரும் போதெல்லாம்
ஞானம்' எழுந்தபடி இருந்
து வீணையும் நாதமும் இணை
ந்திருக்க ஒப்புமா? குமார்—
லா சந்திப்புகள் கிட்டத்தட்ட
ந்திப நிகழ்ச்சிகளாயின.

ஒரு நாள் குமாருக்கு அவ
து தாயார் அபாயகரமான
லயில் இருப்பதாய்த் தந்தி
ந்தது. மூன்று மாதத்தில்
வளைத் தொட்டுத்தாலி கட்டி
ன்று முடிச்சு போடுவதாக
றுதி கூறி, கண்ணீருக்
டையே விடை பெற்றான்
வன். தாயைக் காணச்
சன்ற அவன், உயிரற்ற அவள்
டலைத்தான் கண்டான் சடங்
கள் நடந்தபின் உறவினர் ஒரு
ின் உதவியால் சினிமாவுக்கு
தைகள் எழுதும் பணியை
மற்கொண்டான். மிக விரை
ல் சிறந்த எழுத்தாளனானான்.
க்கெட்டுமிருந்து அவனுக்
ப் புகழ்மாலைகளைத் தேடிக்
காண்டுவந்து குவித்தன
வன் எழுத்துகள்! அந்த
ர் மாலைக் கடலுக்கிடையே
ழ்கிவிட்டான் குமார்! மறந்து
ட்டான் மறக்க மாட்டேன்
ன்றுரைத்த கமலாவை! முற்
லும் மறந்து விட்டான்!!

பத்து மாதங்கள் கழிந்தன.
லா சூலுற்றாள். மறைக்க
டியாத அம் "முழுப் பூசணிக்
யின்" ரகசியத்தைத் தன்
தையிடம் கலங்கிய கண்களு
ன், மெல்ல, வெளியிட்டாள்!
றிப் போனார் அவர்! மானம்
ாய் மரணம் நெருங்குவ
யக் கூச்சலிட்டார்! ஒடு
வளியே ஓடுகாலி என்று துரத்
ார். துக்கம் தாங்கமாட்டா
மல் வெறிபிடித்தவள் போன்று வீட்டை விட்டு ஓடிவந்தாள் கமலா.

* * *

காலச் சக்கரம் வாழ்க்கைப் பாதையில் ஐந்து வருடக் கற்களைத் தாண்டிற்று. குமார் இன்று ஓர் பெரிய கதாசிரியன் மட்டுமல்ல—கத்தை கத்தையாகப் பச்சை நோட்டுகள் அவன் பையிலும், பாங்கியிலும், இரும்புப் பெட்டியிலும் முடங்கிக் கிடந்தன. "குமார்" என்ற பெயர் மறைந்து மதிவாணன் என்ற புனைபெயர் அவனுக்கு ஏற்பட்டது. அவன் கடைசியாக எழுதிய 'விதவை விமலா' என்னும் சினிமாக் கதையில் அவன் புகழேணியின் உச்சியையே எட்டி இருந்தான். பிரபலநடிகை "காஞ்சனா"வின் நடிப்பும் மதிவாணனின் வசனமும் ஒன்றுக் கொன்று பொருத்தமாய் அமைந்துள்ளன என்று பேபர்கள் நற்றமிழில் நயம்பட விமரிசனம் பல எழுதினர். படத்தில் காஞ்சனா, விதவை விமலாவாக ஒப்பற்ற முறையில் நடித்திருந்தாள். அந்த நடிப்பு பல்லாயிர மக்களின் ஓயாத கை தட்டல்களைப் பரிசாகப் பெற்றது. காஞ்சனாவைக் கண்டு முகமன் கூறும் பொருட்டு அவள் பங்களா நோக்கிச் சென்றார் மதிவாணன். ஏதோ ஓர் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்த காஞ்சனா காலடி சப்தம் கேட்டு நிமிர்ந்து நோக்கினாள். குமாரைக் கண்டதும், திடீரென பாம்பை மிதித்தவள்போல் தன்னை மறந்து ஆ என அலறி விட்டாள்!

"அம்மணி! ஏன் இப்படிக் கூச்சலிடுகிறீர்கள். என் வருகை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? நான் தான் தாங்கள் கமலாவாக நடித்துள்ள படத்திற்கு வசனம் எழுதியவன். நடிப்புக் கலைக்கே மெருகு தந்த உங்களுக்கு என் ஆசி கூறிச் செல்லவே வந்தேன்" என்றான்.

"சதிகார சண்டாளனே! நீ நினைப்பது போல் காஞ்சனா பிறவி நடிகை அல்ல! என் பெயர் காஞ்சனாவும் அல்ல. வாழ்க்கைப் போராட்டத்தில் முறியடிக்கப்பட்டு விபசாரத்தைக் கருவியாகக் கொண்டு வாழவழி வகுத்துக் கொண்ட நான்தான் உங்கள் காமவேட்டைக்குப் பலியான கமலா" என்றாள்.

"ஆ! கமலா!! நீயா!!!" என்று உரத்த குரலில் உளறினான் குமார். அவன் உடல் வெள்ளமாக வியர்த்தது! இதயம் அணையப் போகும் ஜோதியைப்போல் படபடவென அடித்துக் கொண்டது!

"பதரே! ஏன் பசப்புகிறாய்? உன் மிருக ஆட்சியின் பலனாகத் தோன்றிய சிசு, என் யோக்கியதையை அப்பட்டமாக எடுத்து வெளி உலகிற்கு உணர்த்திற்று. சமூகத்திலிருந்து நீக்கப் பட்ட நானும், சேயும், பாழ்பட்ட இவ்வுலகில், பசியால் துடித்தோம். இரண்டு நாளில், என் சேய்—என் சேய் என்று கூறுவானேன்! நம் சேய்! ஆமாம், குமார், நீ எனக்குத் திருட்டுத்தனமாக அளித்துவிட்டு ஓடி விட்டாயே அந்தச் சேய், ஆம் ஆம், உன் சேய்தான்—அந்தச் சேய் சுடுகாட்டுக்குச் சென்று விட்டது. பிறகு பிச்சை யெடுத்தாள் இந்தக் கமலா......

"கமலா! என்னைக் கொல்லாதே! பாதகன் நான்! பாவி நான்! போதும் கமலா, மேலும் பேசாதே! மேலும் மேலும் உன் சொற்களெனும் ஈட்டியால் என் இருதயத்தைக் குத்தாதே....."

"இருங்கள் எழுத்தாளர் சார் கதையை முழுக்கக் கேளுங்கள்! பிச்சை யெடுத்தது மட்டுமல்ல, இந்தக் கமலா, பலருக்குப் பிச்சையும் தந்தாள்!—பச்சையாகவே சொல்கிறேனே, ஆடவர்

பலரின் இச்சைக்கு ஆளானாள் நீ பச்சைவர்ணக் கிளி என்று அன்றோர் நாள் வர்ணித்தாயே அந்தக் கமலா!''

"கமலா!"

"கமலா! கமலா! எங்கே இருக்கிறாள் கமலா! யார் கமலா? அவள் இல்லை இன்று! உன் பழைய கமலம்—தூய உள்ளம் படைத்த கமலம்—அன்றலர்ந்த ரோஜா போன்ற அழகுடைய கமலம்—உன்னால் கைவிடப்பட்ட காரிகை கமலம்—அவள் மாண்டுபோய் விட்டாள். நெடு நாட்களுக்கு முன்பே மாண்டுபோய் விட்டாள். அந்த அபாக்கியவதி கமலம் அல்ல நான்! நடிகை காஞ்சனா என் பெயர்! நான் வேறு கமலம்! புதுக் கமலம்!"

"கமலா, நடந்ததை மறந்துவிடு. என்னையும் மன்னித்துவிடு. திரும்பவும் நல்வாழ்க்கைச் சகடத்தை இன்பப் பாதையை நோக்கிச் செலுத்துவோம்! வா, வா கமலா" எனக் கெஞ்சினான் குமார்.

"மதிகெட்டவரே! அன்று பரம்பரைக்காரருக்குப் பயந்து என் வாழ்வுக் கயிற்றைறத் துண்டித்தீர். இன்று என்னைக் கெஞ்சுகிறீர், கமலா கமலா என்று. அன்று புறக்கணித்தீர்—இன்று புகழ்மாலை சூட்டுகிறீர். அன்று பாழுங் கிணற்றில் தள்ளினீர்—இன்று புதுமணம் புரிய அழைக்கிறீர். அன்று அப்படி! இன்று இப்படி! அன்று அப்படி இருந்த நீர் இன்று இப்படி ஆவதற்குக் காரணம் என்ன என்பது எனக்குத் தெரியும். நன்றாகத் தெரியும். அதையும் சொல்லிவிடுகிறேன் கேள். அன்று நான் பஞ்சை! பராரி! இன்றோ நானிலம் புகழும் நடிகை—பணத்தில் புரளும், சீமாட்டி! பராரி பணக்காரியாய விட்டதால் புறக்கணித்த குமார் போற்றிப் புகழ வருகிறார். காஞ்சனாவின் காதலன் என்று பறைசாற்றப்பார்க்கிறார். போதும் உம் பித்தலாட்டம், போம் வெளியே! உம்! நில்லாதீர் என் முன்! கோபம் என்னை விபரீத வாதியாக்குமுன் சென்று விடும்!"

குமார் தலை தொங்க விட்டுக் கொண்டு வாட்டமுற்ற முகத்துடன் சென்றான்.

மறுநாள் செய்தித் தாள்களில் கொட்டை எழுத்துகளில் "**பிரபல சினிமா நடிகை காஞ்சனா நேற்று தம் வீட்டில் மாரடைப்பால் மாண்டார்**—சினிமாவானில் ஓர் ஜோதி மறைந்தது" என்று செய்தி வெளிவந்தது கண்டு ஆராத்துயர முற்றனர் அனைவரும். யாருக்குமே புரியாத அவள் வாழ்க்கையைப் பற்றிப் பலரும் பலவிதமாகவும் பத்திரிகைகளில் பத்தி பத்தியாக வெளியிட்டனர். ஒரே ஒரு பத்திரிகை மாத்திரம் அதற்கே புரியாத சில புதிர் மொழிகளை வெளியிட்டது. அவை, இவை:

"நடிகை காஞ்சனாதேவி ஓர் வானவில்! அருமையான வானவில் தான். கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில் அழகு ததும்பக் காட்சி தந்த வானவில் தான். மீண்டும் கிடைக்கமுடியாத வானவில் தான்! ஆனாலுமென்ன, வானவில் வானவில்தானே! அது, எவ்வளவு நேரம் நீடித்துக் காட்சி தரமுடியும்? எனவேதான் மறைந்துவிட்டது"

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இயந்திரங்களை உபயோகிக்கவும் கிராமவாசிகட்கு வசதிகள் பல செய்துதருதல் வேண்டும். இப்படியெல்லாம் செய்யாமல், இவையெல்லாம் என்ன இப்போது ஆகிற செயல்களா — நடக்குமா—ஆகுமா — அடுத்த தேர்தல் வருகிறதே — அதைக் கவனிப்பதா, அல்லது இதை நாங்கள் கவனிப்பதா — வேறு வேலையில்லையா எங்களுக்கு— கதர் உற்பத்தி செய்ய வேண்டாமா, கைராட்டை சுற்ற வேண்டாமா, 144 போட வேண்டாமா, தடியடி தர்பார் நடத்த வேண்டாமா, ஜாமீன் தொகைகள் கேட்கவேண்டாமா,— சிறைச்சாலைகளை விஸ்தரிக்க வேண்டாமா, சூனாமானாக்களை உள்ளே தள்ளவேண்டாமா— இவ்வளவு மகத்தான வேலைகள் எங்கள் முன் இருக்க, இந்தச் சாதாரண உணவுப் பிரச்சினைக்கா இவ்வளவு கவனத்தைச் செலுத்தச் சொல்கிறீர்— பிடி சாபம், கப்சிப், கபர்தார், என்ற தோரணையில், சர்க்கார் பேசுவார்களானால், நிச்சயமாகக் கூறுகிறேன், 1951-ல் அல்ல அதற்கு அப்புறம் ஒரு பத்தாண்டுகள் பொறுத்துகூட, இவர்களால் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

நம் நாட்டில் இயந்திரத்தை உபயோகித்து விவசாயம் செய்வது வட இந்தியாவிலேயே சிறிது நடை பெறுகிறது. சென்னை மாகாணத்திற்கு அவ்வித வசதிகள் பெரிதும் அளிக்கப்படவில்லை. ஆனால் அதிகப்படிப றாக்குறையாக இருப்பது இம்மாகாணமே! ஏன் இந்த ஓரவஞ்சனை?

அரசியலாளர், விவசாயத்தை வளர்ப்பதற்குரிய விஞ்ஞானத் திட்டங்களை நடை முறைக்குக் கொண்டு வருவார்களா? அல்லது இந்த அடிப்படைத் திட்டங்களை விட்டு விட்டு, ஓரிடத்தில் பற்றாக் குறையை நிவர்த்திக்கக் கிழங்குகளைச் சாப்பிடுங்கள் என்றும், பிறிதோரிடத்தில் வாரத்திற்கு ஒரு முறை பட்டினி கிடவுங்கள் என்றும்தானா கூறிக் கொண்டிருப்பார்? காலம் தான் பதில் சொல்லும்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயப்பிரகாஷ் நாராயணன் சின்னாட்களின் முன்னர் கல்கத்தாவில் பேசுங்கால், "இன்று தீட்டப்படும் அரசியல் திட்டங்கள் (Constitution) மக்களால் எதிர் காலத்தில் ஒதுக்கித் தள்ளப்பட்டு, புது அரசியல் திட்டமொன்று அப்போதைய மக்கள் பிரதிநிதிகளால்—அத்தகையோர் தமது கட்சியினரான சோஷலிஸ்டுகள் என்பது அவர் கருத்து—அமைக்கப்பட்டே தீரும்" என்று எடுத்துக் காட்டியுள்ளார். இவர் மட்டுமல்ல இங்ஙனம் கூறுவது. அரசியல் ஆக்க மன்றத்தின் உறுப்பினர் ஒருவரே சில திங்களுக்கு முன்னர் அந்த அவையின் விவாதத்தின்போது பின்வருமாறு கூறினார். "இப்போதேகூட கட்சிக் கட்டுப்பாடு போன்றவற்றை நீக்கி அரசியல் திட்டங்களை உருவாக்கினால், இப்போது சபையில் நிறைவேறியுள்ள திட்டங்களில் பாதிக்குமேல் மாற்றப்பட்டுவிடும் என்று நான் உறுதியாகக் கூறுவேன். துரதிர்ஷ்டவசமாக இந்த சபையிலே தோழர் அம்பேத்கார் எந்த விதியினைக் கொணர்ந்தாலும் அது நிறைவேறிவிடுகின்றது. தோழர் அம்பேத்கார் இப்பொழுது நாம் இருப்பது பகல் அல்ல இரவுதான் என்றால்கூட, அந்த அவரது விதி, பெருவாரியான ஓட்டுக்களால் இந்த சபையில் நிறைவேற்றப்பட்டுவிடும் என்பது உறுதியினும் உறுதியாகும்." மேலே தீட்டியுள்ளவாறு கூறியவர் வகுப்புவாதியோ, விதண்டாவாதக்காரரோ, குறுகிய நோக்கமுள்ளவரோ, குள்ள உள்ளத்தவரோ அல்லர். அரசியல் ஆக்க மன்றத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர். ஆளுவோருக்கு ஆள்காட்டி விரலாக இருக்க மறுத்து, மக்களாட்சிக் கோட்பாட்டை வலியுறுத்தும் அளவிற்கு உள்ளத்திலே உரமும், நேர்மையிலே நாட்டமும், செயலாற்றும் திறமும் கொண்டவர். அவர்தான் கூறுகிறார் கதிரோன் காயும் ஒளிமிகு பகலினை, காரிருள் கப்பிய இரவெனக் கூறினும் "ஆம்" எனக் கூறி அரசியல் திட்டமாக்கிவிடுவர் அந்த ஒரு "கூட்டத்தார்" என்று! இந்த ஒரு நிகழ்ச்சியே போதும் நாட்டு மக்களுக்கு எதிர்கால அரசியல் திட்டம் எப்படி இருக்கும், அத்தகைய திட்டத்தின் கீழ் நாட்டு மக்களின் நல்வாழ்வு எப்படி ஒளிவிடும், பாட்டாளிகளின் கோட்டத்தின் வாட்டம் போக்கும் புரட்சித் திட்டமாக இருக்குமா — அல்லது, உழைக்க அறியாமலேயே உல்லாச வாழ்வினை உருவாக்கிக் கொண்டுள்ள மேட்டுக் குடியினர்தம் பணக் கோட்டைகளை, சட்டம், சிறைச்சாலை, போலீஸ், பட்டாளம்—இவற்றின் துணையோடு பாதுகாக்கத்தான் பயன்படுமா, என்பன போன்றவற்றை எழில்பெற விளக்கிட!

வளமான மொழி, கலை, கலாச்சாரம், இலக்கியம், வரலாற்றுப் புகழ், வீரம், தீரம், செயலாற்றும் திறம் இவற்றினைக் கொண்டுள்ள திராவிட இனத்தையும், பிற இனங்களையும் அடக்கி ஒடுக்கும் முறையிலேயே இந்த அரசியல் அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது. இலக்கணமும், இலக்கியமும், இனிமையும், தனிமையும் பொங்கித் ததும்பும் தமிழ், வங்காளி போன்ற மொழிகளை அடிமைப்படுத்தி, இலக்கண வாம்பற்ற, இலக்கியச் சிறப்பற்ற வகையற்ற ஒரு மொழியினை, இந்தி என்ற இழிமொழியினை, இந்திய உபகண்டம் முழுவதும் பொது மொழியாக்குவதாம்! உடனடியாக இது இயலாது ஆதலால், பதினைந்து ஆண்டுகள் வரை ஆங்கிலம் பொது மொழியாக இருக்குமென்றும், அதன் பின்னர் இந்தியே பொதுமொழி யாகுமென்றும், இடைக்காலத்தில் இந்தி மொழியினை வளர்த்து, வகையான மொழியாக உருவாக்கிப், புகழேணியிலே ஏற்றிப் பூமண்டலம் முழுவதும் பரப்பவேண்டும் என்றும் இந்த அரசியல் ஆக்கமன்றம் திட்டம் நிறைவேற்றி யுள்ளது. இதுவே அளவுக்கு மீறிய மொழி ஏகாதிபத்திய முறையின் விளைவு, பழி மிக உடைய படுமோசமான திட்டம், பிற மொழிகளை இழிவு படுத்தும் பாழும் பண்புடைய சட்டம் என்று நாம் மட்டுமல்ல, நமது நாட்டு உறுப்பினர்களாக அந்த அவையிலே அமர்ந்துள்ள கோவை இராமலிங்கனார் போன்றோரும் மொழி உணர்வால் உந்தப்பட்டு உரை பல கூறித் துக்கத்தால் துடிக்கின்ற நேரத்திலே, வடநாட்டு இந்தி மொழிக் காவலர் தோழர் புருஷோத்தமதாஸ் டாண்டன் போன்றோர் உடனடியாகவே இந்தி மொழியினைப் பொது மொழியாக்க வேண்டுமென உறுமுகின்றார்கள்! ஊராள்வோரை மிரட்டுகின்றார்கள்! அதுபோன்றதோர் திட்டம், தீட்டாவிட்டால் திருநீலகண்டம் என்று சாபம் பல இடுகின்றார்கள். இவ்வண்ணம் வடநாட்டு ஏகாதிபத்யம் ஜாம்ஜாம் என உருவாகியிருப்பது மொழித்துறையில் மட்டுமல்ல அரசியல்-பொருளியல் வாணிபம் முதலிய எல்லாத் துறைகளிலும்தான்! நாட்டினை ஆலை அரசாகவோ, விவசாய நாடாகமோ, வளம்மிகு பூஞ்சோலையாகவோ வெறும் பாலைவனமாகவோ செய்யத்தக்க அதிகாரங்கள் அனைத்துமே மாகாண அரசியலார் கையிலிருந்து மத்திய அரசியலார் கைக்கு மாற்றப்பட்டுவிட்டது! ஆம்! அடிமைச்சாசனம் உருவாக்கப்பட்டுவிட்டது! இரும்புப்பிடி நமது நாட்டை இறுக்கத் தொடங்கிவிட்டது! எதிர்காலத் திராவிடம் வடநாட்டு டாட்டாக்களிடம் அடகு வைக்கப்பட்டுவிட்டது! நமது மண்டலத்திலே மக்களாட்சி மறைந்து மதோன்மத்தர் ஆட்சி உருவாகத் தொடங்கிவிட்டது! குயிலுக்குக் கோட்டான், இசை பயிற்றும் முறை தீட்டப்பட்டுவிட்டது! திராவிடம் என்ற மயிலுக்கு, வடநாட்டு மந்தி ஆட்டம் பயிற்றும் முறையிலே அரசியல் திட்டம் அரும்பிவிடடது! தென்னாட்டை — நம் பொன்னாட்டை—தாயினும் இனிய நம் திருநாட்டை—ஒப்பற்ற பெருநாட்டை வடநாடு எனும் பாண்டியில் அடைத்துவைக்கும் பெருங்கொடுமை சட்டப்படி செல்லுபடியாகும் என்று சொல்லும்படி அடிமை முறிச்சீட்டுத் தயாரித்துவிட்டார்கள்!

தயாரித்துவிட்டார்கள் அடிமை முறிச்சீட்டு! அந்த அடிமை முறிச்சீட்டிலே, வெட்கமின்றி, துக்கமின்றி, நெஞ்சத் துடிப்பு துளியுமின்றி தங்கள் கையொப்பத்தைப் போட்டுவிட்டார்கள் நம்ம காமராஜர்கள்!

விடுதலை கிளையை இழந்து தவிக்கும் வீரத் திராவிடமே! அடிமைச் சாசனத்தில் இழுத்துப் பிணைக்கப் பட்டுவிட்ட எம் அருமைத் தென்னாடே! காங்கிரஸ் எனும் ருத்திரக்

(7 ம்-பக்கம் பார்க்க)

வெளிவந்துவிட்டது

திராவிடர் டைரி—19

திராவிடரனைவரும் பெற்றிருக்கவேண்டிய சிறந்த நாட்குறிப்பு
திராவிட முன்னேற்றக் கழக முழு விவரங்கள் அடங்கியது

500 பக்கங்கள்—விலை அணா 12

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரண தபாலில் அனுப்ப ரூ. 0-14-0-ம் பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1-2-0-ம் அனுப்பவேண்டும்.

இந்த நாட்குறிப்பில்

* அண்ணாவின் பொன் மொழிகள் நாளுக்கு ஒன்று வீதம் 365
* தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணா புகைப்படம்
* தி. மு. கழகக்கொடி—இரு நிறத்தில்
* தி. மு. கழகத் தோற்றமும், வளர்ச்சியும்—முழு விவரங்கள்
* தி. மு. கழக அமைப்பு முறை
* தலைமைக் கழக பொதுக்குழு, துணைக் குழு விவரங்களும், உறுப்பினர் பெயர்களும்
* கழகப் பேச்சாளர் பெயரும், முகவரியும்
* தி. மு. கழகக் கிளைகள் 350-ன் விவரங்களும் செயலுறுப்பினர் பெயர்களும் — மாவட்டவாரியாக
* தி. மு. மாணவர் கழக விவரங்களும் செயலுறுப்பினர் பெயர்களும்
* திராவிடர் கொண்டாடற்குரிய திருநாட்கள்
* அரசினர் விடுமுறை நாட்கள்
* தபால் தந்தி கட்டண விவரங்கள்
* ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன்) கட்டணங்கள்
* விற்பனைவரி, வருமானவரி விவரங்கள் மற்றும்பல இன்றியமையாத குறிப்புகளும் அடங்கியுள்ளன.

இரண்டே நாட்களில் ஏராளமான பிரதிகளுக்கு ஆர்டர்கள் கிடைத்து விட்டன.
எஞ்சியிருப்பவை சொற்ப பிரதிகளே.
விற்பனையாளர்க்குக் கழிவு 20% அனுப்புஞ் செலவு வேறு
முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்படமாட்டாது

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு
சென்னை 1.

நேஷனல் கால்

முன்னேற்றக் கொள்கைகளைத் தாங்கி வெளிவருகிறது.

தனி இதழ் 2 அணா. ஆண்டு கட்டணம் ரூ. 6.

முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.
விவரங்கட்கு: மானேஜர்

நேஷனல் கால்

15, குப்பைய்ய செட்டி தெரு, சென்னை 17.

சிறந்த புத்தகங்கள்

அண்ணாவின் அறைகூவல்	...	0	3	0
அறநிலையங்கள்	...	0	6	0
எங்களைக் கவர்ந்த புத்தகங்கள்	...	0	1	6
விடியுமா?	...	1	0	0
ஒய்யாரி	...	0	8	0

தனிப்பிரதி வேண்டுவோர் தபால்தலைகள் அனுப்பி புத்தகத்தைப் பெறலாம். விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனாம்.

கிடைக்குமிடம்: எம். நூரி

14, A. குப்பையர் தெரு, சென்னை. 1.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons.)